**செய்தி வெளியீடு எண்: 272** **நாள்: 20.04.2018**

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (20.4.2018) சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெற்ற நீதித்துறை முத்திரைத்தாள் மின்னணுமாக்கல் விழாவில் ஆற்றிய உரை</u>**

இவ்விழாவிற்கு தலைமை ஏற்றிருக்கும்
சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி
நீதியரசர் குமாரி இந்திரா பானர்ஜி அவர்களே!

மாண்புமிகு சட்டம், நீதிமன்றம், சிறைத்துறை, சுரங்கம் மற்றும் கனிம வள
அமைச்சர் சகோதரர்
திரு சி.வி.சண்முகம் அவர்களே!

சிறப்புரை ஆற்றிய
நீதியரசர் டி.எஸ். சிவஞானம் அவர்களே!

வருகை தந்திருக்கின்ற மாண்புமிகு நீதியரசர்களே!

வரவேற்புரை நல்கிய மரியாதைக்குரிய தலைமைச்செயலர்
முனைவர் கிரிஜா வைத்தியநாதன் அவர்களே!

மரியாதைக்குரிய தமிழக அரசின்
தலைமை வழக்கறிஞர்
திரு விஜய் நாராயணன் அவர்களே!

தமிழ்நாடு அரசின் உள்துறை கூடுதல் தலைமைச்செயலர்
திரு நிரஞ்சன் மார்டி அவர்களே!

சென்னை உயர்நீதி மன்ற தலைமைப்பதிவாளர்
திரு ஆர். சக்திவேல் அவர்களே!

தமிழ்நாடு அரசின் பதிவுத்துறைத் தலைவர்
திரு குமரகுருபரன் அவர்களே!

சென்னை உயர்நீதிமன்ற பதிவாளர்
திரு குமரப்பன் அவர்களே!

மரியாதைக்குரிய அரசு வழக்கறிஞர்களே!

அனைத்து வழக்கறிஞர் சங்கங்களின்
தலைவர்களே! வழக்கறிஞர்களே!

உயர்நீதிமன்ற அலுவலர்களே !
பத்திரிக்கை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என் இனிய காலை வணக்கங்களை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீதித்துறையில் மின்னணு ஆளுமை முறைகளை புகுத்துவதன் அவசியத்தையும், அதனால் மக்களுக்கு ஏற்படும் நன்மைகளை கருத்தில் கொண்டும், இத்துறையில் முழுமையாக மின்னணு ஆளுமை முறைகளைக் கொண்டு வர ஏதுவாக, நீதிமன்றங்களில் நீதிசார்ந்த மின்னணு முத்திரைத்தாள் முறையினை புகுத்திட மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அம்மாவின் அரசால், இம்முறை இன்று முதல் அறிமுகப்படுத்தப்படுகிறது.

போலி முத்திரைத்தாள்களை ஒழிக்கவும், முத்திரைத்தாள்கள் பயன்பாட்டில் பாதுகாப்பினை அதிகரிக்கவும் தமிழ்நாடு அரசு தீவிர முயற்சி எடுத்து வருகிறது. பதிவுத்துறையில் சென்னை மண்டலத்தில் பயன்பாட்டில் உள்ள மின்னணு நீதிசாரா முத்திரைத்தாள் முறையை, மாண்புமிகு அம்மாவின் அரசு, தமிழ்நாடு முழுவதும் விரிவாக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மேலும் நீதித்துறையில் பயன்படுத்தப்படும் நீதிசார்ந்த முத்திரைத்தாள்கள் பயன்பாட்டிலும் பாதுகாப்பான இம்முறையை கொண்டுவருவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இத்திட்டத்தை செயல்படுத்த, திருவாளர்கள் ஸ்டாக் ஹோல்டிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் என்ற மத்திய அரசு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனம் ஏற்கனவே உச்சநீதிமன்றத்திலும், டெல்லி, சத்தீஸ்கர், பஞ்சாப், ராஜஸ்தான், உத்தர பிரதேசம் மற்றும் ஹிமாச்சல பிரதேசம் மாநில உயர்நீதிமன்றங்களிலும் இம்முறையை அறிமுகப்படுத்தி, செயல்படுத்தி வருகிறது.

இந்த நீதிசார்ந்த மின்னணு முத்திரையை பொதுமக்கள் தாங்களாகவே இணையம் மூலம் உருவாக்கி பயன்படுத்தலாம். கணினி மற்றும் இணைய இணைப்பு இல்லாதவர்கள் மேற்கண்ட நிறுவனத்தால் அமைக்கப்பட்ட

மையங்களில் அல்லது நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகளில் உரிய விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து தொகையினை செலுத்தி, நீதிசார்ந்த மின்னணு முத்திரைகளை பெற்றுக் கொள்ளலாம்.

இம்முறை, முதற்கட்டமாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையிலும், அடுத்த கட்டமாக அனைத்து முதன்மை மாவட்ட நீதிமன்றங்களிலும் செயல்படுத்தப்பட உள்ளது. தமிழ்நாடு அரசால் இயக்கப்படும் இ–சேவை மையங்கள் மூலமாகவும் இம்முறையை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

நீதிசார்ந்த மின்னணு முத்திரைத்தாள்களில் தனிப்பட்ட இரசீது எண் அச்சிடப்பட்டிருக்கும். நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யும் பிரிவில் இந்த முத்திரைத்தாளை ஒப்படைத்தால், அதன் உண்மைத் தன்மையை சரிபார்ப்பது மட்டுமின்றி, அதனை மீளவும் தவறான முறையில் பயன்படுத்தா வண்ணம் பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு நீதிமன்றங்களில் புதிய தொழில் நுட்பத்தை புகுத்தி அவற்றின் செயல்பாட்டை விரைவுபடுத்தவும், அதன் மூலம் பொதுமக்களுக்கு உரிய பயன்கள் விரைவாக சென்றடையவும் தமிழ்நாடு அரசு ஆவன செய்துள்ளது.

இதுமட்டுமன்றி, எண்ணில்லா நலத்திட்டங்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை இந்த அரசு நீதித்துறைக்கு வழங்கியுள்ளது. அவற்றில் சிலவற்றை நான் இங்கு மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகிறேன்.

வழக்குரைஞர்களின் நலனைக்கருத்தில் கொண்டு பணியில் இருக்கும்போதே இறக்கும் வழக்குரைஞர்களின் வாரிசுதாரர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வந்த நிதியுதவி 5 லட்சத்து 25 ஆயிரம் ரூபாயிலிருந்து, 7 லட்சம் ரூபாயாக உயர்த்தியும், தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதிக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த நிதியுதவி 4 கோடி ரூபாயிலிருந்து 8 கோடி ரூபாயாக உயர்த்தியும் மாண்புமிகு அம்மாவின் அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மாநிலத்தின் பல்வேறு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைவில் முடிவுக்கு கொண்டுவர ஏதுவாக கடந்த ஓராண்டில் பல்வேறு பதவிகளுக்கு 1,188 பணியிடங்கள் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டுள்ளன.

நீதித்துறையில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடும் வண்ணம், மாநிலத்தின் பல்வேறு இடங்களில், கடந்த ஆண்டில் மட்டும் புதிதாக 149 நீதிமன்றங்களை உருவாக்க அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுதல், நீதிமன்றக் கட்டடங்களை பழுது பார்த்தல், இதர உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற பணிகளுக்காக 92 கோடி ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் சூரிய மின்சக்திக்கான உபகரணங்களை நிறுவுவதற்கு 1 கோடியே 42 லட்சம் ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்ற பாரம்பரிய கட்டிடத்தின் 125ஆம் ஆண்டு விழாவினை கொண்டாடுவதற்கு தமிழ்நாடு அரசால் ஒரு கோடியே 45 லட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுதவிர, 14ஆம் நிதிக் குழுவின் பரிந்துரையின்படி வழக்கு பதிவுருக்களை ஸ்கேனிங் செய்து கணினிமயமாக்குவதற்காக 37 கோடி ரூபாய் நிர்வாக ஒப்பளிப்பு அளித்து தமிழ்நாடு அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

On this happy occasion, I inform that this Government stand in support of judiciary for speedy disposal of cases by introducing new technology and improving infrastructure facilities.

விரைவாக நீதி கிடைக்கச் செய்வதைக் கருத்தில் கொண்டு, உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பணியாளர் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் நீதிமன்றங்களின் தேவைகளுக்கு உடனுக்குடன் நிறைவேற்றும் உணர்வு கொண்ட அரசாக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு செயல்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**